REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✱ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: சித்திரை 22உ வியாழன் (5-5-55) ★ ★ வெளியூர்: சித்திரை 23உ வெள்ளி (6-5-55) [இதழ் 277

இந்தியா—இலங்கை மாநாடு தோல்வி!

இலங்கை—இந்தியா ஒப்பந்தம் ஒழுங்குடன் நடைபெறுவதைத் தடை செய்து நிற்கும் பிரச்சினைகளைப் பேசுவது பற்றி ஆலோசனை செய்ய இலங்கை சர்க்காருக்கும், இந்தியத் தூதவர் பி. என். சக்ரவர்த்திக்கும் இடையே நடைபெற்ற மாநாடு தோல்வியில் முடிவடைந்து விட்டது.

இந்த மாநாட்டில் இலங்கை சர்க்கார் சார்பில் பிரதமர் கொத்தலாவலையும், இலங்கை—இந்திய விவகாரக் கழக உறுப்பினர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

படுதோல்வியில் முடிவுற்ற மாநாட்டில் இந்தியர்களைப் பதிவு செய்வது பற்றியும், பிரயாணச் சீட்டுகள் வைத்திருப்போர் பற்றியும் பேசப்பட்டதாம்.

தென்னாட்டினருக்கு மற்றொரு பட்டை நாமம்!

தொழிலமைச்சர் குழைத்துப் போட்டார்!

மின்சாரக் கருவி உற்பத்திச்சாலையை நிர்மாணிக்கும் பிரச்சினை

தென்னாட்டவர் மனுவிற்கு அலட்சியமான பதில்

"மின்சாரக் கருவி உற்பத்தித் தொழிற்சாலையை எவ்விடத்தில் நிர்மாணிப்பது என்பது குறித்து, கூடியவிரைவில் நியமிக்கப்பட இருக்கும் நிபுணர் குழுவின் கருத்தறிந்த பின்னர்தான் இறுதியாக முடிவு கட்டப்படும். அக்குழு, சிக்கனச் செலவு, தொழில் நுணுக்கம் ஆகிய இரண்டையும் அடிப்படையாகக்கொண்டு விரிவாக ஆராய்ந்து, மேற்படி தொழிற்சாலையை நிர்மாணிப்பதற்குத் தகுந்த இடத்தை அரசாங்கத்திற்குச் சிபாரிசு செய்யும். அம்முடிவை அரசாங்கம் நிறைவேற்றும்."

—இவ்வாறு, தமிழ்நாட்டு மக்கள் சபை உறுப்பினர்கள் சார்பில், பி. நடேசன் கொடுத்த கோரிக்கை மனுவிற்கு, தொழில் மந்திரி கே. சி. ரெட்டி பதில் தந்துள்ளார்.

உத்தேச மின்சாரக் கருவி உற்பத்திச் சாலையை தமிழ் நாட்டில் நிர்மாணிக்க வேண்டுமென்று தமிழ் நாட்டு மக்கள் சபை உறுப்பினர்கள், இந்தியத் தொழில் மந்திரியிடம் விளக்கமான ஒரு விண்ணப்பத்தைக் கொடுத்திருந்தனர்.

அதற்கு அத்தொழில் மந்திரி கொடுத்துள்ள மேற்குறித்த பதில் 'தட்டிக் கழிக்கும்' பதிலாக இருக்கிறது எனக் கருதுவதுடன், அதிருப்தியும் கொண்டுள்ளனர்.

மேற்படி தொழிற்சாலையை நிர்மாணிக்கும் இடம் பற்றி ஆராயும் பொழுது, சென்னை மாநிலத்தின் கோரிக்கைக்கு, அதற்குரிய முக்கியத்துவம் கொடுக்கப்படும் என்றும் மேற்படி அமைச்சர் குறிப்பிட்டார் எனவும் தெரிய வருகிறது.

பிரஸ்தாப தொழிற்சாலையை சென்னை மாநிலத்தில் ஏற்படுத்துவதற்கான புள்ளி விவரங்களும் காரண காரியங்களும் தெள்ளத் தெளிய எடுத்துக் காட்டப்பட்டு இருக்கின்றன.

இந்தி மொழித் திணிப்பால் தென்னாட்டிற்குள்ள விசேட கஷ்டங்கள் குறித்தும், தொழில் மயமாக்குவது பற்றியும், தமிழ்நாட்டு மக்கள் சபை உறுப்பினர்கள், மத்திய அரசாங்க அமைச்சர்களுக்கு செய்துகொண்ட முறையீடு, அந்த அமைச்சர்களின் அனுதாபத்தைப் பெறத் தவறிவிட்டது.

அகில இந்திய உத்தியோகப் பரீட்சைக்கு இந்தி மொழியைக் கட்டாயமாக்குவது பற்றி விளக்கம் கூறிவந்த உள்நாட்டு அமைச்சர், அதை ஒரு வாய்ப்பாகக் கொண்டு இந்தித் திணிப்புக்கு அரசியல் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள 15 வருடகாலக் கெடுவை திரும்பவும் வலியுறுத்தியுள்ளார். அவர் கூற்று, இந்தித் திணிப்பை எதிர்த்து, தென்னிந்திய காங்கிரசும் மற்றும் பல அரசியல் கட்சித் தலைவர்களும் எடுத்துக்காட்டியுள்ள காரணங்கள் அனைத்தையும் இந்தியப் பேரரசினர் ஒப்புக்கொள்ளவில்லை என்பதை அறிவிக்கிறது.

அவர் நம்பிக்கை!

சென்னை, மே 5—

இன்னும் நான்கு அல்லது ஐந்து ஆண்டுகளுக்குப் பின் எந்த ஒரு கிராமமும் மின்சார வசதி இன்றி இருக்காதென தாம் நம்புவதாக நிலவரி மந்திரி மாணிக்கவேலர், சோழவரம் கிராமத்தில் மின்சாரத் திட்டத்தைத் திறந்து வைத்துப்பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

காவல் தண்டனை நீடிப்பு!

காஷ்மீரின் பிரதம மந்திரியாயிருந்த ஷேக் அப்துல்லாவின் காவல் தண்டனையை மேலும் 6 மாதங்களுக்கு காஷ்மீர் சர்க்கார் நீடித்திருக்கிறதாம்.

அரசாங்க மொழியாக இந்தி இடம் பெறும் காலம் நீடிக்கப்படுமா?

இந்திய அரசியல் சட்டத்தில், சட்டம் அமுலுக்கு வந்த நாளான ஜனவரி 26, 1950 முதல் 15-ஆண்டுகளில் இந்தி மொழி இந்தியாவின் அரசாங்க மொழியாக ஆக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டிருப்பதைக் காட்டியே, வட இந்தியர்கள், இந்தியை திணிப்பதில் தீவிரம் காட்டி வருகின்றனர்

ஆனாலும், குறிப்பிட்டுள்ள 15-ஆண்டுகளுக்குள்ளாக, இந்தி, அரசாங்க மொழியாக்கப்படுவது முடியாத காரியம் என்ற எண்ணம் வலுத்து வருகிறதாம்.

எப்படியேனும், எத்தனை எதிர்ப்புகளிருந்தாலும், இந்தியைத் திணித்துவிட எத்தனிப்போரின் எண்ணத்திற்கு மாறாக, இந்தியை அரசாங்க மொழியாக்குவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள காலவரையறையை நீடித்தாகவேண்டுவது அவசியம் என்பதை வடநாட்டு அரசியல் வாதிகள் படிப்படியாக உணர்ந்து வருவதாகவும் கூறப்படுகிறது.

மந்திரிகளைப் பாதிக்கும் விவகாரங்கள்!

"அமைச்சர்களைப் பாதிக்கும் விவகாரங்களில் விதிகள் இயற்றும் அதிகாரங்களை சர்க்காரிடம் ஒப்படைக்கக் கூடாது," என்று துணைச் சட்டங்கள் பற்றிய மக்கள் சபைக் குழு, தனது 3-வது அறிக்கையில் சிபாரிசு செய்திருக்கிறது. மக்கள் சபை, விதிகள் இயற்ற சர்க்காருக்கு அதிகாரம் வழங்க வேண்டியது அவசியம் என்று கருதுகின்ற நேரங்களில், விதிகளுக்கு சபையின் சம்மதத்தைப் பெற்ற பின்னரே அவை அமுல் செய்யப்படவேண்டுமென்றும் குழு சிபாரிசு செய்திருக்கிறது.

இது தவிர, எல்லா விதிகளும் பிரசுரிக்கப்படுவதற்கு ஒருமாத காலத்திற்கு முன்னேயே சபையில் தாக்கல் செய்யப்படவேண்டுமென்றும், அவற்றில் சபை தேவையான மாறுதல்களைச் செய்யலாமென்றும், கூடுமான வரை, இலகுவான மொழியிலேயே மேற்படி விதிகள் இருக்கவேண்டுமென்றும் குழு கேட்டுக்கொண்டிருக்கிறது.

இவைகளுக்கேற்றாற்போல் தக்க ஷரத்துகள், விதிகள் இயற்றும் அதிகாரங்களை சர்க்காருக்கு வழங்கி, வருங்காலத்தில் கொண்டு வரப்படும் மசோதாக்களில் அவை சேர்க்கப்படவேண்டுமென்றும் அக்குழு வற்புறுத்தியிருக்கிறது.

ஆவடி மாநாட்டுச் செலவு

நேரு கருத்துக்கு அதிகாரி விளக்கம்

ஆவடி காங்கிரசுக்கு செலவிடப்பட்ட பணம் பற்றி பண்டித நேருவின் கருத்து மீது சென்னை சர்க்காரின் உயர்தர அதிகாரி ஒருவர் தனது கருத்தை வெளியிட்டிருக்கிறார்.

நேருவின் கருத்தை அவர் ஒப்புக்கொள்ளவில்லையாம்.

பாதுகாப்புச் செலவுகள் தவிர்த்து மற்ற செலவுகளை, கட்சியே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது பண்டித நேருவின் கருத்து.

ஆயிரக்கணக்கான மக்கள் ஒரு இடத்தில் கூடும்பொழுது அந்த இடத்தில் சுகாதார ஏற்பாடுகளைச் செய்வதும், சாலைகளைத் திருத்தி அமைப்பதும் சர்க்காரின் பொறுப்பு என்றும், இதற்கு அரசியல் சம்மந்தம் எதும் கிடையாது என்றும் அந்த அதிகாரி கூறுகிறார்.

இப்போது கும்பகோணத்தில் நடைபெறஇருக்கும் மகாமகத்திற்கு ஏராளமான மக்கள் கூடுவார்கள் என்றும், நகரசபையுடன் ஒத்துழைத்து சர்க்கார்தான் தண்ணீர் சப்ளை, சாலை அமைப்புப் போக்குவரத்து இவைகளைச் செய்ய வேண்டும் என்றும் அந்த அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

'கம்யூனிஸ்டு கூட்டங்களுக்குக் கூட போலீஸ் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன,' என்றும் அந்த அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

"ஆவடிக்கருகில் கட்டப்பட்ட ரயில் நிலையத்திற்கு ஏராளமான பிரயாணிகள் ஏற்றிச் செல்லப்பட்டனர்; இதன் மூலம் சர்க்காருக்கு லாபம் கிடைத்திருக்கலாம்," என்று, அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்தி பற்றி பந்த் தந்த விளக்கத்தில் சி. ஆர். அதிருப்தி!

இருந்தாலும் களத்திலிருந்து ஓடி ஒளிய முயற்சி!

சென்னை, மே 4—

"இந்தியைப் பற்றியும், அகில இந்திய அரசாங்க பரீட்சைகள் பற்றியும் மக்கள் சபையில் கூறப்பட்டிருப்பது எனக்கு திருப்தியளிப்பதாயில்லை.

"மொழியினை படிப்படியாக அமுலுக்குக் கொண்டுவருவது, அதற்கு ஊக்கமளிப்பது ஆகிய முறைகள், 'நாம் ஒடுக்கப்படுகிறோம்,' என்ற உணர்வுக்கு இடமில்லா வகையில் வகுக்கப்பட வேண்டும்.

"இவை பற்றி நான் உருவான கருத்துக்கள் தரமுடியும்; ஆனால், இந்தப் பிரச்சினையில், நான் ஒருவன் மட்டும் தனித்து நின்று விவாதிட்டவனாக இருக்க விரும்பவில்லை,"

என்று, ஆச்சாரியார், நேற்று முன்தினம் மக்கள் சபையில் உள்நாட்டு மந்திரி பண்டித பந்த் விடுத்த அறிக்கை பற்றி கேட்கப்பட்டபோது கூறியிருக்கிறார்.

பாதுகாப்பு!

புதுடில்லி, மே 4—

திருமணம் செல்லாதென்று நீதிமன்றத்தில் முடிவு செய்யப்படுவதற்கு முன்பு பிறந்த குழந்தைகளுக்கு வாரிசு உரிமை சம்மந்தமாக பாதுகாப்பு அளிப்பதற்கான மசோதா ஒன்று விரைவில் மக்கள் சபையில் கொண்டுவரப்படும் என்று சட்ட மந்திரி படாஸ்கர் தெரிவித்திருக்கிறார்.

மாடுகளுக்கு ஏற்படும் கோமாரி நோய்

தடுப்பதற்கு ரூ. 4 கோடி

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எல்லா மாநிலங்களிலும் மாடுகளுக்கு ஏற்படும் கோமாரி நோயைத் தடுப்பதற்கு ரூபாய் 4½ கோடி செலவிட மத்திய கோமாரி தடுப்பு குழு சிபாரிசு செய்துள்ளதாகத் தெரிய வருகிறது.

பிரான்சுக்கு 10 கோடி டாலர் அமெரிக்க உதவி

இந்தோ - சீனாவில் பிரெஞ்சுத் துருப்புக்களுக்கு ஏற்படும் செலவுக்காக பிரான்சுக்கு அமெரிக்கா இந்த ஆண்டு 10 கோடி டாலர் தந்து உதவ ஒப்புக் கொண்டிருக்கிறதாம்.

கம்யூனிஸ்டு கற்கோட்டை நீர் கோட்டையாகிறது!

'ஸ்டாலின்கிராட்' என்ற பெயர் மறைகிறது

பஞ்சாயத்துத் தேர்தலில் கம்யூனிஸ்டு கட்சியின் பெருந் தோல்வி

ஐதராபாத், மே 5—

ஐதராபாத் மாநிலத்தில் 'ஸ்டாலின்கிராட்' எனச் சிறப்பித்துக் கூறப்படுவதும், தெலிங்கானா கம்யூனிஸ்டு கட்சியின் தலைமை பீடமாக இருப்பதுமான கம்மம் மாவட்டம், அண்மையில் நடைபெற்ற பஞ்சாயத்துத் தேர்தலில் கம்யூனிஸ்டு கட்சிக்குப் பெருந் தோல்வியைக் கொடுத்திருக்கிறது.

காங்கிரஸ் கட்சி 102 இடங்களைக் கைப்பற்றி இருக்க, கம்யூனிஸ்டு கட்சி 12 இடங்களை மட்டுமே கைப்பற்றி இருக்கிறது. சென்ற பொதுத் தேர்தலின்போது கம்மம் மாவட்டத் தொகுதிகள் அனைத்திலும் கம்யூனிஸ்டு கட்சியினரே வெற்றி பெற்றுள்ளனர்.

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க.)

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்
சென்னை 5—5—'55 வியாழன்

நிருபர் தரும் தகவல்!

ஆவடியில் காங்கிரஸ் மாநாடு நடைபெற்று மூன்று திங்களுக்கு மேலாகிவிட்டது. மாநாடு கூடிய சத்தியமூர்த்தி நகரை, மேடுபள்ளமில்லாமல் நிரவல் செய்வதற்கு இந்திய இராணுவத்தைச் சேர்ந்த தென்பகுதி இராணுவம் பயன்படுத்தப்பட்டது. பெரும் இயந்திரங்களின் துணை கொண்டு தங்கள் பொறுப்பை மேற்படி இராணுவம் நிறைவேற்றிற்று.

இத்தகவல் மற்றவர்களுக்குத் தெரிந்திருக்கும் அளவைக் காட்டிலும், இந்தியப் பேரரசின் இராணுவத்துறை அமைச்சருக்கு அதிகம் தெரிந்திருக்க வேண்டும். இதுதான் எதிர்பார்க்கக்கூடியதும்.

ஆவடி புகைவண்டி நிலையத்திலிருந்து மாநாடு இடமான சத்தியமூர்த்தி நகருக்கு ஆறு இலட்ச ரூபாய் செலவில் புதிய இருப்புப்பாதை போடப்பட்டது. புதிய இருப்புப்பாதை போடும் விவகாரம், இரயில்வே அமைச்சரின் ஒப்புதலை முன்கூட்டிப் பெருமல் செயலாற்றப்பட்டது என ஒருவரும் கூறத் துணியார்.

ரூபாய் ஆயிரம், இரண்டாயிரம் எனச் செலவழிக்கப்பட வேண்டிய வேலைக்குக்கூட அமைச்சரின் அனுமதி முன்கூட்டியே பெற்ருக வேண்டிய நடைமுறை இருக்கும்பொழுது, ஆறு இலட்ச ரூபாயை செலவிடும் ஒரு திட்டம், அமைச்சர் அறியாது செய்து முடிக்கப்பட்டது என்பதை எவராலும் நம்ப முடியாது. எனவே, புதிய இருப்புப்பாதை ஏற்பாடு, அமைச்சர் உடன்பாட்டுடன் அமைக்கப்பட்டது எனக் கொள்வதுதான் முறை—உண்மையும் அதுதான்.

மாநாட்டுப் பந்தல் அலங்கார அமைப்பை விரைவில் செய்து முடிப்பதற்கும், வேறு பல அத்தியாவசியப் பணிகளை உடனுக்குடன் துரிதமாக நிறைவேற்றுவதற்கும் சென்னை அரசாங்கம் தனது 'மோட்டார் லாரி'களைக் குறைந்த விலைக்குத் தனி நபர்களுக்கு விற்றும் இருக்கிறது. இவ்விற்பனைக்கு, முன்கூட்டியே ஒப்புதல் புள்ளி பெறும் வழக்கமானமுறையை, சென்னை அரசாங்கம் வேண்டுமென்றே மேற்கொள்ளாது இருந்துவிட்டது. குறிப்பிட்ட இவ்விவகாரத்தில், வழக்கத்தை மீறின ஒன்றே, சென்னை அரசாங்கப் போக்கின் உள்ளடக்கத்தை விளங்கிக் கொள்வதற்குப் போதுமானதாகும்.

இதுபற்றி சட்டசபையில் கிளம்பிய கேள்விகளும், அவைகளுக்கு அரசாங்கச் சார்பில் கூறப்பட்ட பதில்களும், சென்னை அரசாங்கத்தின் செயல் விபரீதமானது என்பதை சுட்டிக் காட்டியது.

சத்தியமூர்த்தி நகரை நிர்மாணிக்கும் வகையிலும், வேறு சில வசதிகளைச் செய்து தந்த வகையிலும் செங்கற்பட்டு மாவட்டக் கழகம், நாலாயிரம் ரூபாய்க்குமேல் செலவழித்திருக்கிறது. இந்த உண்மை, சட்டசபை சம்பவத்திலிருந்து தெரியவந்தது.

சத்தியமூர்த்தி நகருக்கு அருகிலிருந்த மின்சாரத்தைக் கொண்டு செல்ல புதிதாக ஏற்பாடு செய்ததும், மின்சாரப் செலவழிந்ததும், பாதை அமைத்ததும், தண்ணீருக்கு வகை செய்ததும், சுகாதார காப்புக்கு வழி செய்ததும், சென்னை அரசாங்கத்தின் சொந்தப் பொறுப்பில் நடைபெற்றுள்ளவையே ஆகும். இவ்வினங்களில் பல்லாயிரக்கணக்கான ரூபாய் செலவழிந்திருக்கும் என்பது சொல்லாமலே விளங்கும்.

காங்கிரஸ் கட்சி மாநாட்டிற்கு, காங்கிரஸ் தலைவர்களாலேயே நடத்தப்பெறும் ஒரு அரசாங்கம், பொதுமக்கள் வரிப் பணத்தைச் செலவிடுவது முறை—நியாயம் — அறநெறி என்ற உறுதியான நம்பிக்கையில்தான், ஆவடி மாநாட்டிற்கு அரசாங்கம் சலுகை காட்டி இருக்கிறது. அந்த நம்பிக்கை, அரசாங்க அமைச்சர்களாக உள்ள ஒன்று இரண்டு காங்கிரஸ் தலைவர்களுக்கு மட்டுமே இருந்தது என்பதில்லை. அமைச்சர்களாக உள்ள முதல் வரிசை தலைவர்கள் முதல், கடை வரிசை தலைவர்கள் ஈறாக உள்ள காங்கிரஸ் தலைவர்கள் அனைவருக்கும் இருந்தது—இருந்து வருகிறது.

ஆவடி மாநாடு முடிந்த மூன்று மாதங்களுக்கு மேலான பிறகு, ஒரு கட்சி மாநாட்டிற்கு, அதே கட்சியைச் சேர்ந்தவர்கள் அரசாங்கத்தை நடத்துபவர்களாக இருக்கிறார்கள் என்பதற்காக, அரசாங்கப் பணத்தைச் செலவிடக்கூடாது —அது முறையற்றது—எனும் குறிப்பு கிளம்பி இருக்கிறது. அக்குறிப்பு காங்கிரஸ் தலைவர்கள் பலரிடமிருந்தும் கிளம்பவில்லை. அகில இந்திய காங்கிரஸ் தலைவர் தேபர் அவர்களிடமிருந்தும் பிறக்கவில்லை. ஆனால் இந்தியப் பிரதமர் நேரு பண்டிதரிடமிருந்து, தெளிவற்ற நிலையில், மூன்று திங்களுக்குப் பிறகு கிளம்பி இருக்கிறது.

குறிப்பிட்ட இந்த விவகாரத்தில் உள்ள நியாயாநியாயத்தை, கடந்த மூன்று திங்களாகக் குறிப்பிடாத பண்டிதர், இப்பொழுது மட்டும் குறிப்பிட வேண்டிய கட்டாயம் என்ன ஏற்பட்டது? ஏன் இதுவரையில், மற்றவர்களைப் போலவே, அவரும் மவுனியாக இருந்தார்?

ஆவடி மாநாட்டின் மூலமூர்த்தியாக இருந்த நேரு, அங்கு அமைக்கப்பட்டிருந்த சகல வசதிகளையும் காணத் தவறி இருப்பார் என எண்ண முடியுமா? வசதிகளைக் கண்டு, உளம் பூரித்து, தொடர்புடையவர்களைப் பண்டிதர் பாராட்டியுள்ளாரே! பாதுகாப்புப் படையினரின் போக்குவரத்து ஏற்பாடுகளைப் பாராட்டியதுடன், தானும் அன்றே பண்டிதர், நேரடி பயிற்சியும் பெற்றுள்ளார்!

இவ்வளவு சிறந்த ஏற்பாடுகளும் காங்கிரஸ் பணத்தால் செய்யப்பட்டுள்ளனவா அல்லது, பொது மக்கள் வரிப் பணத்தைக் கொண்டு அரசாங்கத்தால் செய்யப்பட்டனவா என, ஏன் பண்டிதர் அப்பொழுது கேட்கத் தவறினர்? அப்படி ஒரு கேள்வி கேட்க வேண்டும் என்ற எண்ணம், அப்பொழுது பண்டிதருக்கு ஏற்படவே இல்லையா? அல்லது ஏற்பட்டும், ஏற்படாததுபோல் இருந்துவிட்டாரா? அப்பொழுது வாய் திறவாது இருந்தவர், இப்பொழுது மட்டும் திறக்க வேண்டிய அவசியத்திற்கு எப்படி வந்தார்? அதற்கு எது காரணம்?

இப்படி வினக்கள் அடுக்கடுக்காக எவருள்ளத்திலும் தோன்றுவது இயல்பேயாகும். இக்கேள்விகள் ஒன்றுக்கும் பதில் கிடைக்கப்போவது என்றும் கிடையாது.

மூன்று திங்கள் கழித்த பிறகாவது, 'முன்னால் செய்தது தவறு—அத்தவறைத் திருத்த வேண்டும்' எனக் கூறுவதற்கு இப்பொழுது ஒரே ஒரு பண்டிதராவது இருக்கிறார்; அதன் பிறகு அந்த ஒரு கேள்வியைக் காலம் தாழ்த்தியாவது கேட்பதற்கு காங்கிரஸ் கட்சியில் ஒருவரும் இல்லையே என்பது தான் நமது கவலை. அந்த நிலையில், காங்கிரஸ் தலைவர்கள் கையில் அரசாங்கம் சிக்கினுல், அரசாங்கப் பணம் எந்தெந்த வகையில் சொந்த வாணவேடிக்கைகளுக்குப் பயன்படுத்தப் படுமோ, யார் கண்டார்கள்?

ஒரு அரசியல் கட்சிக்காக, அக் கட்சித் தலைவர்களால் நடத்தப்பெறும் ஒரு அரசாங்கம், பொதுமக்கள் வரிப் பணத்தை ஒரு செல்லாக்காசும் செலவிடக் கூடாது — அது முறைகேடு என்ற எண்ணம் பொதுமக்களுக்கு ஏற்பட்டாக வேண்டும். அத்தகு உயர்ந்த எண்ணம் மக்கள் உள்ளங்களில் இடம் பெற, தேசிய ஏடுகள் தங்கள் எழுதுகோலை சிற்சில நேரங்களிலாவது பயன்படுத்த வேண்டும்.

ஆவடி மாநாட்டுத் தொடர்பில் காங்கிரஸ் அரசாங்கம் செலவழித்தத் தொகை குறித்து, தேசிய ஏடுகள் ஏற்கனவே விளக்கம் கேட்டிருந்தால், அப்போக்கு முறையற்றது எனக் கண்டித்து இருந்தால், உண்மையிலேயே, பண்டிதர் மூன்று மாதங்கள் கழித்து, நியாயங் கேட்கக் கிளம்பி இருப்பதற்கு பதிலாக, அப்பொழுதே கேட்டிருப்பார். நிலைமை இதற்குள்ளாக நேர் செய்யப்பட்டிருக்கும்.

இப்பொழுதும், சென்னை ஆங்கில தினசரியான 'மெயில்' புதிய டில்லி நிருபர்தான், பண்டிதரின் உள்ளக்கிடக்கையை, 'நம்பப்படுகிறது' என்ற போக்கில் தகவலாகத் தந்துள்ளார். இது மேலும் நிச்சயிக்கப்பட வேண்டும். செல்வாக்குள்ள தேசிய ஏடுகள் செய்யாத ஒரு காரியத்தை சென்னை ஆங்கில ஏடு செய்திருப்பது பாராட்டுதற்குரியதேயாகும்.

1954 செப்டம்பர் 1-ந் தேதி இயங்க ஆரம்பித்த 'கோக் கரி' உலைக்களம், நாளொன்றுக்கு 600 டன் என்ற இலட்சிய உற்பத்தி அளவை ஏற்கனவே எய்தி, 'கோக் கரி' விஷயத்தில் சிந்திரியின் தேவைகளைப் பூர்த்தி செய்துவிட்டது.

1952 அக்டோபரில் ஆரம்பிக்கப்பட்ட சமுதாய நலத் திட்ட வட்டாரங்களில், 1954 செப்டம்பர் வரை, 22,393 எக்கர் நிலம் பழத்தோட்ட விவசாயத்தின்கீழ் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

இந்தியா, பாகிஸ்தான் தூதுவர்கள் பழிவாங்கப்படுகின்றனர்?

'சம உரிமை அளிக்கப்படவில்லை'—ரொடீஷிய பிரதமர் வருத்தம்

காலிஸ்பரி, மே 3—

மற்ற நாட்டு தூதுவர்களுக்கு அளிக்கப்படும் சலுகைகளையும், உரிமைகளையும் ரொடீஷியா சர்க்கார் இந்தியா — பாகிஸ்தான் தூதுவர்களுக்கு அளிப்பதில்லை என்றும், அவர்கள் பழிதீர்த்துக்கொள்ளப்படுகிறார்கள் என்றும், ரொடீஷியா கூட்டாட்சியின் பிரதமர், 'இங்கிலாந்தின் மக்கள்,' என்ற பெயரில் இயங்கும் இயக்கமொன்றின் கூட்டத்தில் பேசுகையில் கூறியுள்ளார்.

"உயர்ந்த நாகரீகமுடைய மக்களின் அதிகாரபூர்வமான பிரதிநிதிகளை நாம் இவ்வாறு அவமதித்துக் கொண்டே இருப்பது கூடாது," என்று அவர் மேலும் கூறினர்.

"வருந்தத் தக்க முறையில்—துரதிருஷ்டவசமான நிலையில் இந்தியா, பாகிஸ்தான் ராஜியவாதிகள் வைக்கப்பட்டிருக்கிறார்கள்," என்பது அவரது கருத்து.

"நாம் அவர்களை ஒப்புக்கொள்ளும் அளவுக்கு படிப்பினை பெற வேண்டும்; இல்லையேல், அந்தத் தூதுவர்கள் திருப்பி அழைத்துக் கொள்ளப்படுவதைக் கண்டு வேதனைப் படவேண்டும்," என்று அவர் எச்சரித்தார்.

சென்ற மாதம் பாண்டுங்கில் நடைபெற்ற ஆசிய-ஆப்பிரிக்க மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு கிடைத்த அழைப்பை ஏற்றுக்கொள்ள முடியாதுபோனது பற்றி அவர் வருந்தினர்.

'கொடுமைக் குறுளர்'கள்!

ஈஸ்ட்லண்டன் (தென் ஆப்பிரிக்கா) மே. 5—

இங்குள்ள ஐரோப்பிய நிலச்சுவான்தாரர் ஒருவர் தமது பண்ணையில் ஆப்பிரிக்கச் சுதேசிகளான கறுப்பர்களை வசிக்க அனுமதித்த 'கடுங்குற்றத்'திற்காக, தென் ஆப்பிரிக்க நீதிமன்றம் அவருக்கு 10,200 பவுன் அபராதம் விதித்திருக்கிறது.

அவர் மீது இன ஒதுக்கல் சட்டத்தின்கீழ் தொடரப்பட்டுள்ள 170 குற்றச்சாட்டுகளில் ஒரு குற்றச்சாட்டிற்கு 60 பவுன் வீதம் அபராதமும், ஒரு மாதம் வீதம் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது. இது தவிர, இன்னும் 3 ஆண்டு காலத்திற்கிடையில் இது போன்று வேறு எவ்விதக் குற்றமும் செய்யக்கூடாது என்ற நிபந்தனையும் விதிக்கப்பட்டிருக்கிறதாம்!

மேற்கண்ட இந்த நிபந்தனையின் பேரில் ஒவ்வொரு குற்றச்சாட்டிற்கும் 56 பவுன் வீதம் அபராதத் தொகை நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறதாம். எனவே, அவர் தற்போது மொத்தமாகக் கட்டவேண்டிய அபராதத் தொகை 680 பவுன்தானும். இந்தத் தொகையைச் செலுத்த ஒரு வாரகால அவகாசமும் அளிக்கப்பட்டிருக்கிறதாம்!

தென் ஆப்பிரிக்க சர்க்காரின் இன ஒதுக்கல் சட்டம் கூறுகிறபடி, ஒவ்வொரு இன மக்களும், அவரவர்களுக்கென ஒதுக்கித் தரப்பட்டுள்ள பிரதேசங்களில் மட்டும் தான் குடியிருக்க வேண்டும்.

உலக பாங்கியின் வருமானம் குறைகிறது

கடந்த மார்ச்சு மாதத்துடன் முடிந்த 9 மாத கால அளவில், உலக பாங்கியின் நிகர வருமானம் 1,86,00,000 டாலர் (சுமார் ரூ. 8,85,36,000) என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

சென்ற ஆண்டில் இதே கால அளவில் நிகர வருமானம் 1,50,00,000 டாலர் (ரூ 7 கோடி 14 லட்சம்) மட்டும்தான் என்றும், இதனுல், இந்த ஆண்டு 36,00,000 டாலர் (சுமார் ரூ. 1 கோடி 71 லட்சம்) அதிக வருமானம் கிடைத்துள்ளது என்றும் கூறப்படுகிறது.

அந்த ஒன்பது மாத காலத்தில், ரூ. 121 09 கோடி பெறுமான 13 கடன்கள் தந்துள்ளது. ஆஸ்திரியா, ஆஸ்திரேலியா, பெல்ஜியம், பிரிட்டிஷ் கிழக்காப்பிரிக்கா, இலங்கை, கொலம்பியா, பின்லாந்து, இந்தியா, மெக்சிகோ, பெரு ஆகிய நாடுகளுக்குக் கடன் தரப்பட்டது.

இதுவரையில் மொத்தமாக, உலக பாங்கி தந்துள்ள கடன் தொகையின் மதிப்பு 216 80,00,000 டாலர் (சுமார் ரூ. 1032.9 கோடி) என்று கணக்கிடப்பட்டுள்ளது.

வெளிநாட்டுத் தூதுவராலயங்கள்

ஆடம்பரச் செலவு செய்வதில்லையாம்!

பண்டித நேரு கூற்று

புதுடில்லி, மே. 3—

"வெளிநாடுகளில் உள்ள இந்தியத் தூதுவர்கள், எவ்வித ஆடம்பரச் செலவுகளையும் மேற்கொண்டதாக அண்மையில் நியமிக்கப்பட்ட அதிகார பூர்வமான விசாரணைக் குழு காண முடியவில்லை," என்று பண்டித நேரு, மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

"குழுவின் அறிக்கை இரகசியமானது; அதை வெளியிடுவது முறையானதோ அல்லது பழக்கமானதோ அல்ல," என்றும் பண்டித நேரு டாக்டர் சுரேஷ்சந்திராவுக்குக் கூறியிருக்கிறார்.

வெளிநாட்டு அலவன்ஸ் நிர்ணயிப்பது, வெளிநாட்டுத் தூதுவராலயங்களின் திறமை குறித்து ஆராய்வது, தூதுவர்களுக்குத் தேவையான சாதனங்கள் பற்றி கணக்கிடுவது முதலியனவற்றிற்காககுழு நியமிக்கப்பட்டதாகஉதவி வெளிநாட்டு மந்திரி ஏ. கே. சந்தா குறிப்பிட்டிருக்கிறார்.

வெளிநாட்டிலாகாவைச் சேர்ந்த இரு கூட்டுச் செயலாளர்களும், நிதி இலாகாவைச் சேர்ந்த ஒரு கூட்டுச் செயலாளரும் குழுவில் இடம் பெற்றிருந்தனர்.

குழுவின் செலவுகளுக்காக, வரவு - செலவுத் திட்டத்தில் ரூ. 1,50,000 ஒதுக்கப்பட்டிருந்தது.

ஜாதி முறையால் பயனும் இருக்கிறதாம்!

பட்டீல் கருத்து

சூரத், மே 2—

"ஜாதி முறைகளின் கொடுமைகளை ஒழிப்பதென்பது, ஜாதி முறைகளை ஒழிப்பதாகாது," என்று பம்பாய் பிரதேசக் காங்கிரஸ் தலைவர் எஸ். கே. பட்டீல் பார்சிகள் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

ஏராளமான மக்களுக்கு, 'ஜாதி அமைப்பு' உதவியிருக்கிறது என்பது அவர் கருத்து.

"இன்று பலதரப்பட்ட வகுப்பினரின் கல்விக்கெனவும், முன்னேற்றத்திற்கெனவும், ரூ. 20 கோடி வரையில் நிதி இருக்கிறது; இதன் மூலமாக பலர் பயனடைந்திருக்கிறார்கள்; தேசிய வாழ்க்கையைத் தடுத்து நிறுத்தி பொதுக் காரியங்களைத் தடுக்க முன்வரும் போதுதான், ஜாதிப் பிரிவினை கொடுமை செய்கிறது," என்று அவர் மேலும் கூறினர்.

குண்டா திட்டமா? பாராபோல் திட்டமா?

திட்டக் குழு இன்னும் முடிவெடுக்கவில்லையாம்!

சென்னை, மே 5—

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ், சென்னை மாநிலத்தின் குண்டா திட்டத்தையா, அல்லது கூர்னூரத்திலுள்ள பாராபோல் திட்டத்தையா மேற்கொள்வது என்பது பற்றி திட்டக் குழு இன்னும் முடிவெடுக்கவில்லை என்று கூறப்படுகிறது.

குண்டா திட்டத்தில் துவக்கத்தில் 1,80,000 கிலோவாட் மின்சாரம் உற்பத்தியாகும் என்றும் பின்பு அது 3,75,000 கி. வா. மின்சாரம் உற்பத்தியாகும் அளவிற்கு விரிவாகுமென்றும் கூறப்படுகிறது.

ஆனால், பாராபோல் திட்டம், குண்டா திட்டத்தைவிட குறைந்த செலவில் நிறைவேற்றப்படக்கூடியதாம். குண்டா திட்டத்தின்படி உற்பத்தியாகும் மின்சாரத்தை ஏற்கனவே தயாராக உள்ள பல திட்டங்களை நிறைவேற்ற உபயோகப்படுத்த முடியும் என்றும் கூறப்படுகிறது.

இரண்டு திட்டங்களையும் ஆராய்ந்த பின்னர் கனடா நிபுணர் குழு தந்துள்ள ஆலோசனையின்படி, கனடாவின் உதவி குண்டா திட்டத்திற்குத்தான் கிடைக்குமாம். திட்டத்திற்காகும் செலவில் 60 சதவிகிதம் கனடாவின் உதவி கொண்டு சரிக்கட்டப் போதுமானதாயிருக்குமாம்.

இரண்டு திட்டங்களையுமே மேற்கொள்ள இந்தியப் பேரரசிற்கு ஆசையிருந்தாலும், பொருளாதார குறைவான நிலை ஏதேனும் ஒரு திட்டத்தை மட்டுமே மேற்கொள்ள அனுமதிக்கிறதாம்

அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கலந்துகொள்ள டில்லி செல்லும் சென்னை மாநில நிதி மந்திரி சி. சுப்பிரமணியம், குண்டா திட்டத்தையே திட்டக் குழு இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்க வேண்டுமென வற்புறுத்துவார் என்று கூறப்படுகிறது.

மூலதன உதவி தர

புதிய சர்வதேச நிறுவனம்

அமெரிக்கா பெரும் பங்கேற்கும்

புதிதாக நிறுவப்பட இருக்கும் சர்வதேச நிதிக் கார்ப்பொரேஷனில் அமெரிக்காவும் பங்குகொள்ள அனுமதிக்குமாறு சட்டசபையை அமெரிக்க ஜனாதிபதி ஐசனோவர் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

வெளிநாடுகளில் தனிப்பட்ட அமெரிக்கர்கள் விடுமுதல் போடுவதற்கான முயற்சிகளுள் இதுவும் ஒன்று என்று அவர் குறிப்பிட்டார்.

மொத்த மூலதனமாக 10 கோடி டாலருடன் சர்வதேச பாங்கியுடன் இணைப்புள்ள நிறுவனமாக இந்தக் 'கார்ப்பொரேஷன்' நிறுவப்படும் என்றும், இதில் அமெரிக்கா 3,51,68,000 டாலர் போட வேண்டுமென்றும் ஜனாதிபதி கேட்டிருக்கிறார்.

இந்தியாவுக்கு மேலும் அமெரிக்க உதவி

இந்தியாவுக்கு அமெரிக்கா 14 லட்சம் டாலருக்கு மேல் (63 லட்சம் ரூபாய்) உதவி அளிப்பதற்கான மூன்று ஒப்பந்தங்கள் சென்ற சனிக்கிழமையன்று கையெழுத்தாகியுள்ளன என்று தெரிகிறது.

இந்திய பல்கலைக் கழகப் பட்டங்கள்

மலேயாவில் அங்கீகாரம் இல்லை

கோலாலம்பூர், மே. 5—

இந்தியாவில் உள்ள பல்கலைக் கழகங்களில் தரப்பட்ட பட்டங்களை அங்கீகரித்துக் கொள்ள அதிகாரிகள் மறுப்பதாக மலேயா இந்தியப் பட்டதாரிகள் சங்கம், அரசாங்கத்திற்கு மனுச் செய்திருப்பதாகத் தெரிகிறது.

இந்தியா அல்லாத இதர பல்கலைக் கழகப் பட்டங்களைப் போலவே இந்திய பல்கலைக் கழகப் பட்டங்களையும் மதிக்குமாறு சங்கம் கோரியிருப்பதாகத் தெரிகிறது.

மலேயா பல்கலைக் கழகம், இந்திய பல்கலைக் கழகங்களில் எவற்றிலும் தரப்பட்ட பட்டங்களை அங்கீகரிக்கவில்லை என்றும் கூறப்படுகிறது.

பலமுறை இதுபற்றி எடுத்துக் கூறியும் பலன் ஏற்படவில்லையாம்.

அங்கீகாரத்திற்கான முயற்சியை இந்திய அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமே தவிர, இந்த சங்கம் அல்ல என்றும் கூறப்படுகிறதாம்.

பாரிஸ்டருக்கு சிறை தண்டனை

நீதிமன்றத்தை அவமதித்த குற்றம்

அலகாபாத், மே 3—

கோரக்பூர் வழக்கறிஞரான பாரிஸ்டர் நவால் கிஷோர் என்பவருக்கு, நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்திற்காக மூன்று மாத சிறைத் தண்டனையும் ரூ 2,000 அபராதமும் விதிக்கப்பட்டது. அலகாபாத் உயர் நீதிமன்றம் இத்தண்டனையை அளித்திருக்கிறது.

கோல்டன்பூர் மாவட்ட நீதிபதியை, தவறான முறையில், அவமதிக்கும் நோக்குடன் அந்த வழக்கறிஞர் நடந்துகொண்டாராம்

இந்த வழக்கை விசாரணை செய்த அலகாபாத் உயர் நீதிமன்ற நீதிபதிகள், வழக்கறிஞர் நவால் கிஷோர், தவறான முறையில் நடந்துகொண்டார் என்று கண்டனர்.

40,000 குழந்தைத் திருமணம்

12 நாள் நிறைந்த குழந்தைக்கும் மண முடித்தனர்!

பம்பாய், மே 5—

மார்வாரில், சென்ற வாரத்தில் மட்டும் மொத்தம் 40 ஆயிரம் திருமணங்கள் நடைபெற்றுள்ளதாகத் தகவல் கிடைத்துள்ளது.

திருமணம் செய்து கொண்டவர்களுக்கு வயது, 2 முதல் 7 வரை இருக்கும் என்று தெரிகிறது.

பல கைக்குழந்தைகளுக்கும் திருமணம் நடந்ததாம்.

ஜெஹானஸ்பூர் எனுமிடத்தில் குழந்தை பிறப்பதற்கு முன்பே கூட திருமணப் பேச்சுக்கள் முடிந்துவிட்டனவாம்.

ஒரு குழந்தை பிறந்த 12-வது நாளன்று திருமணம் செய்து வைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழந்தையின் எட்டு வயது சகோதரிக்கும் அதே நாளில் திருமணம் நடந்ததாம்.

சிமெண்ட் காங்கிரீட் தளத்தின் மீது சாகுபடி

திருநெல்வேலி, ஏப் 29—

மணற்பாங்கான பகுதிகளில் சிமெண்ட், காங்கிரீட் தளத்தின் மீது விளைநிலம் அமைத்து சாகுபடி செய்ய 2-வது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் மானியம் அளிக்குமாறு கேட்டுக்கொண்டு, நேற்று நாசரேத்தில் நடைபெற்ற தமிழ்நாடு கிறித்துவர்கள் மாநாட்டில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

நாசரேத்திலுள்ள தொழிற்பள்ளியின் ஆதரவிலும், மற்றும் சில தனிப்பட்டவர்களாலும் இத்தகைய நிலங்கள் அமைத்து நடத்திய சோதனைகள் வெற்றி பெற்றுள்ளதாகக் கூறப்பட்டது.

பிரான்சுக்கு அமெரிக்கா கட்டளை!

தியமை ஆதரிக்குமாறு கூறுகிறது

தென் வியட்நாம் பிரதமர் கிங்-தின்-தியம் என்பவரை ஆதரிக்க வேண்டுமென்று பிரான்ஸை அமெரிக்கா கேட்டுக்கொண்டிருக்கிறதாம்.

தியமை ஆதரிக்குமாறு முன்னாள் மன்னர் பாவோ-டாயையும் அமெரிக்கா கேட்டுக்கொண்டிருக்கிறதாம்.

தென் வியட்நாம் பிரச்சினையைப் பொறுத்தமட்டில், பிரான்ஸ், தனது பாதையை மாற்றிக்கொள்ள வேண்டுமென்று அமெரிக்கா கூறியிருக்கிறதாம்.

கடந்த சில நாட்களாக வலிமையுடன் போரிட்டுவரும் தியம்தான் தன்னால் ஆதரிக்கப்பட வேண்டிய பேர்வழி என்று அமெரிக்கா கருதுகிறது.

இந்தோ - சீனாவில், தியமின் எதிரிகளுக்குப் பயன்படும் எக்காரியத்தையும் செய்யாமல் அமெரிக்காவைவிட்டுவிட்டதாம். தியமின் பதவியைப் பொறுத்தமட்டில் அமெரிக்காவும், பிரான்சும் மாறுபாடான எண்ணங்களுடன் இருக்கின்றனவாம்.

ஆச்சரியந்தான்!

கும்பகோணம், மே. 2—

"இங்கிலாந்தில் ஆப்பிள் முதலிய பழங்கள் மலிவாயிருந்த போதிலும், வாழைப்பழம் மட்டும் கிராக்கியாயுள்ளது; ஒரு 'பூவன் பழ'த்தின் விலை 11 அணாவுக்குக் குறைவில்லை; விருந்தில் வாழைப் பழம் தரப்பட்டால் அது பிரமாதமாகக் கருதப்படுகிறது; இங்கிலாந்தில் ஏழைகள் வாங்கி உண்ண முடியாத பொருளாக வாழைப் பழம் உள்ளது," என்று அண்மையில் இங்கிலாந்து சென்று திரும்பிய அண்ணாமலை பல்கலைக் கழகப் பேராசிரியர் டாக்டர் ஏ. சிதம்பரநாதன் அவர்கள் இங்கு கூறியுள்ளார்.

தூத்துக்குடியில் தி. மு. கழகம் கொண்டாடிய மே தின விழா

பல்லாயிரம் தொழிலாளர் கொண்ட ஊர்வலம்

பல கட்சியினரும் பங்கு பெற்றனர்

1—5—55-ல், தூத்துக்குடி நகர தி. மு. கழக சார்பில் நடைபெற்ற மே தின விழாவில், நகர காங்கிரஸ் கமிட்டி, பிரஜா சோஷலிஸ்டுக் கட்சி, ஆர்வி மில் தொழிலாளர் சங்கம், ஸ்பின்னிங் மில் தொழிலாளர் சங்கம், உப்புத் தொழிலாளர் சங்கம், வண்டித் தொழிலாளர் சங்கம், குதிரை வண்டித் தொழிலாளர் சங்கம், விறகு உடைக்கும் தொழிலாளர் சங்கம், நகர சுத்தித் தொழிலாளர் சங்கம், சங்கு குளி தொழிலாளர் சங்கம், மோட்டார் டிரான்ஸ்போர்ட் தொழிலாளர் சங்கம், தோணித் தொழிலாளர் சங்கம், கப்பல் கூலி தொழிலாளர் சங்கம், அச்சுத் தொழிலாளர் சங்கம், சோடா பாக்டரி தொழிலாளர் சங்கம், முனிசிபல் எம்ப்ளாயீஸ் யூனியன், எலக்டிரிக் கம்பெனி சிப்பந்திகள் சங்கம், போர்ட் டிரஸ்ட் எம்ப்ளாயீஸ் யூனியன், கப்பல் டாலி கிளார்க் சங்கம், லாஞ்ச், டிரட்ஜர், பவர்போட் யூனியன், கோவாப்ரேடிவ் எம்ப்ளாயீஸ் யூனியன் ஆகிய பல சங்கங்களும் நகர தி. மு. கழக கிளைகள் அனைத்தும் கலந்துகொண்டன.

மாலை 4 மணிக்கு மேளவாத்தியங்களுடன் தோழர்கள் எம். எஸ். சிவசாமி, கே. வி. கே. சாமி, கேதாளமுத்து, அய்யாச்சாமி ஆகியோரது தலைமையில் மாபெரும் ஊர்வலம் ஒன்று நடைபெற்றது ஊர்வலத்தில், 200 வண்டிகளும், 60 குதிரை வண்டிகளும் வரிசையாக அணிவகுத்து வர, பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்கள் கலந்து கொண்டனர். மற்றும் சிலம்ப விளையாட்டுகளும், கேளிக்கை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

இரவு 7 மணிக்கு, சந்தனமாரியம்மன் கோவில் மைதானத்தில், தோழர் கே. வி. கே. சாமி தலைமையில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில், தோழர்கள் எம். வெங்கடகிருஷ்ணன், பால்பாண்டி, மரியதாஸ், கே. தாளமுத்து ஆகியோர் மே தின விழா குறித்துச் சொற்பொழிவாற்றினர். இறுதியில் தோழர் எம். எஸ். சிவசாமி நன்றி கூறலுடன் கூட்டம் முடிவுற்றது.

திருச்சியில் மே தின விழா

திருச்சி நகர தி. மு கழகத்தின் சார்பில், 1—5—55ல், மேதின விழா சிறப்புறக் கொண்டாடப்பட்டது. நகரத்திலுள்ள தி. மு. கழகத் தோழர்கள் தங்கள் தங்கள் பகுதியை தோரணங்களாலும், வளைவுகளாலும் அலங்கரித்துவைத்திருந்தனர்

காலை 9 மணிக்கு திருச்சி மலைக்கோட்டை தி மு. கழகத்திலிருந்து 400-க்கு மேற்பட்ட சைக்கிள்கள் கொண்ட ஊர்வலம் புறப்பட்டது தோழர் ஈ. வெ கி. சம்பத் அவர்கள் ஊர்வலத்தில் கலந்துகொண்டு நகரத்தில் உள்ள கிளைக் கழகங்களில் கொடியேற்றி வைத்தார்.

மாலை 4 மணிக்கு திருச்சி பீடி, சுருட்டுத் தொழிலாளர் சங்கத்தில், தோழர் ஈ. வெ. கி. சம்பத் கொடியேற்றிவைத்தார்.

மாலை 5 மணிக்கு திருச்சி பிரபாத் டாக்கீசிலிருந்து மாபெரும் ஊர்வலம் புறப்பட்டது. ஊர்வலத்தில் 5000-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் கலந்துகொண்டனர் தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத, ஏ கோவிந்தசாமி எம். எல். ஏ, ஆகியோரும் கலந்துகொண்டனர்.

ஊர்வலத்தில் சிலம்ப விளையாட்டு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

மாலை 7 மணிக்கு, டவுன் மண்டபத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் குழுமியிருந்தனர். கூட்டத்திற்கு தோழர் எம். எஸ். மணி தலைமை தாங்கி, மே தினத்தை தி. மு. கழகம் கொண்டாடுவதின் அவசியத்தைப் பற்றி பேசிய பின், சென்னை மாநில மோட்டார் போக்குவரத்து பொதுத் தொழிலாளர் சம்மேளன துணைச் செயலாளர் தோழர் எஸ். ஜி. கிருஷ்ணன், திருச்சி பீடி - சுருட்டு தொழிற் சங்கத் தலைவர் ஐ. எம். ஷரீப், ஜி. மதிவாணன், ஏ. கோவிந்தசாமி, எம். எல் ஏ, ஆகியோர் சொற்பொழிவாற்றிய பின். தோழர் ஈ வெ கி. சம்பத் அவர்கள், நீண்டநேரம் அரியதோர் சொற்பொழிவாற்றினார்.

தோழர் சம்பத் அவர்களுக்கு, திருச்சி நகர தி. மு கழகம், பெரிய கடைவீதி, 20-வது வட்டம், 27-வது வட்டம், கல்லுக்குழி, தாராநல்லூர், மலைக்கோட்டை, சிந்தாமணி, உறையூர், பீமநகர், ஆகிய கிளைக் கழகங்கள் சார்பிலும், சங்கரன் படிப்பகம், மறுமலர்ச்சி மன்றம், மோட்டார் தொழிலாளர் சங்கம், பீடி சுருட்டு தொழிலாளர் சங்கம் ஆகியவைகளின் சார்பிலும் மலர் மாலைகளும், கைத்தறித் துண்டுகளும் அணிவிக்கப்பட்டன.

★

மற்ற இடங்களில் ...

கடம்பூர் :

1—5—55 மாலை 6 மணியளவில், அரசலாற்றில் தோழர் டி. பழனிவேல் தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தோழர்கள் கே. ஆர். பாலகிருஷ்ணன், எல். டி கிட்டப்பா, எஸ் ஆர். ராதா, நாராயணசாமி ஆகியோர் 'இன்றைய நிலைமையும் மே தினமும்' என்பது பற்றி சொற்பொழிவாற்றினர்.

சென்னை 13-வது வட்டம்

1—5—55 காலை 9 மணிக்கு டாக்டர் எம். நாராயணசாமி இல்லத்தில், தோழர் பிச்சைக்கண்ணு தலைமையில் நடைபெற்ற மேதின விழாவில் தோழர் பி. தங்கராசன் கொடியேற்றிவைத்தார்.

சென்னை 9-வது வட்டம்

1—5—55 காலை 9 மணிக்கு, கழகப் பணிமனையில் தோழர் ஏ. எஸ். வேணு தலைமையில் நடைபெற்ற விழாக் கூட்டத்தில், தோழர் ஏ. எஸ். ராமன் கழகக் கொடியேற்றிவைத்தார். பின்னர் தோழர்கள் ராமசாமி சுமுத்தையா முதலியோர் சொற்பொழிவாற்றினர். இறுதியில் மக்களுக்கு, இனிப்பும், பாலும் வழங்கப்பட்டது. விழாவில் ஏராளமான கைவண்டி தொழிலாளர்கள் கலந்துகொண்டனர்.

உடுமலைப்பேட்டை

1—5—55 மாலை 3 மணியளவில் கழக அலுவலகத்திலிருந்து சுமார் 1000 தோழர்கள் கொண்ட ஊர்வலம் புறப்பட்டுச் சென்று, பொதுக்கூட்ட நிலை வந்தடைந்தது. இங்குள்ள 4 ஆலைகளைச் சேர்ந்த தொழிலாளர்களும், மணவர் முன்னேற்றக் கழகம், புதுமை நாடக மன்றம் ஆகியவைகளைச் சேர்ந்த தோழர்களும் ஊர்வலத்தில் கலந்துகொண்டனர். பின்னர், தோழர் கனகு தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், தோழர்கள் ப. நாராயணன், பொன்னுசாமி, இரா. தங்கவேலு, எஸ். அப்பாவு ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

குணியமுத்தூர் :

1—5—55 மாலை இவ்வூர் தி.மு. கழகத்தின் சார்பில், தோழர் எம் ஏ முத்து. தலைமையில் நடைபெற்றது. தோழர் தங்கமாணிக்கம் கொடியேற்றி வைத்துப் பேசிய பின், மே தினத்தைப் பற்றி தோழர்கள் முத்துசாமி, தேவராசு ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

பரவை :

1—5—55 காலை 8 மணியளவில் தி. மு. கழகக் கட்டிடத்திலிருந்து ஊர்வலம் புறப்பட்டு நகரின் முக்கிய வீதிகளின் வழியாக வந்து கழகக் கட்டிடம் வந்து சேர்ந்தது. முக்கிய வீதிகள் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

குடியேற்றம் :

1—5—55ல், குடியேற்றம் பகுத்தறிவு இளைஞர் மன்றச் சார்பில், ஆற்றில் தோழியர் ஏ. பட்டம்மாள் தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தோழியர்கள் தேசியமணி, அருண்மொழி ஆகியோர் மேதின விழா குறித்துச் சொற்பொழிவாற்றினர்.

கோவை (இராமநாதபுரம்)

1—5—55 காலை 9 மணியளவில், கோவை இராமநாதபுரம் (கிளை) தி. மு. கழகச் சார்பில் மே தின விழா, தோழர் அ பழனிச்சாமி தலைமையில் நடைபெற்றது. தோழர் என். வி. நடராசன் அவர்கள் தி மு. கழகக் கொடி ஏற்றி வைத்து மே தினத்தைப் பற்றி அரியதோர் சொற்பொழிவாற்றினார். விழாவில், இன்னிசை, வில்லுப் பாட்டு முதலிய நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

மதுரை :

1—5—55ல், மதுரை அச்சம்பத்து வ. உ. சி. நினைவுப் படிப்பகம் தி. மு. கிளைக் கழகத்தின் சார்பில் மே தினவிழா நடைபெற்றது. தோழர் நீ சனார்த்தனன் கழகக் கொடியேற்றிவைத்தார். சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

மண் சரிந்து விழுந்து 6 பேர் உயிரிழந்தனர்

பலர் புதையுண்டனரா?

பத்ரா நீர்த்தேக்க வேலையிலிருந்த தொழிலாளருக்கு நேர்ந்த விபத்து

பெங்களூர், மே 4—

லக்கவல்லி எனுமிடத்திலுள்ள பத்ரா நீர்த்தேக்க அணைப் பிரதேசத்தின் வலது கரையில் ஏற்பட்ட நிலச்சரிவினால் 6 தொழிலாளர்கள் கொல்லப்பட்டனர் என்றும், பலர் காயம்பட்டனர் என்றும் கூறப்படுகிறது.

நீர்த்தேக்கம் கட்டுவதை ஒட்டிய வேலையில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்கள் மீது 50 அடி பரப்புள்ள மண் விழுந்ததினால் இவ்விபத்து ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

மண்ணுக்கடியில் கண்ணுக்குத் தெரியாமல் மேலும் பலர் புதையுண்டு கிடக்கக் கூடும் என்றும் அஞ்சப்படுகிறது.

சர்க்காருக்கோ, போலீசாருக்கோ, இதுபற்றி எவ்வித அறிவிப்பும் கிடைக்கவில்லை என்றும் கூறப்படுகிறதாம்.

4 தாழ்த்தப்பட்ட மக்கள் இடி விழுந்து பலி

நெல்லூர், மே. 5—

ராபூர் என்ற இங்கிருந்து 45-மைல் தொலைவில் உள்ள ஒரு ஊரில் கடந்த ஞாயிறன்று ஒரு 70 வயதுக் கிழவி, ஒரு இளைஞன், இளந் தம்பதிகள் ஆகியோர் களத்தடியில் போர் அடித்துக் கொண்டிருக்கையில் இடிவிழுந்து பரிதாப கரமாகக்கொல்லப்பட்டனர் என்று தெரிய வருகிறது.

இவர்கள் நால்வரும் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் என்று கூறப்படுகிறது.

இதற்கு முன் பெய்த ஆலங்கட்டி மழையில் வயல்களில் வேலை செய்து கொண்டிருந்த 10 பேர் காயமுற்றனர் என்றும், பயிர்களுக்கும் மிகுந்த சேதம் ஏற்பட்டதாயும் சொல்லப்படுகிறது.

விருதுநகரில் இராமாயண நாடகம்

இருபது பேர் கைது

விருதுநகர், மே. 4—

நேற்றிரவு இங்கரில் தோழர் எம் ஆர். இராதா 'இராமாயண' நாடகம் நடைபெற்ற கொட்டகை முன்பு தடையை மீறி, மறியல் செய்ய முயன்றதாக 20 பேர் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களில் கிருஷ்ணகுமார், சி. இராமச்சந்திரன், ஆர். எஸ். இராமச்சந்திரன், தர்மராஜன், வீரமணி ஆகியோர் உள்ளனர் என்று தெரிகிறது. இவர்கள்மீது இ. பி. கோ. 147, 188-வது பிரிவுகளின்படி வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கிறதாம். இவர்கள் பாதுகாப்பில் வைக்கப் பட்டுள்ளனர்.

நாடகம் தடையேதும் இன்றி நடைபெற்றதாம்.

கம்யூனிஸ்டு...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் தேர்தலில் கலந்து கொள்வதற்கு ஆட்கள் கிடைப்பது அரிதாகிவிட்டதும், அவர்கள் வாக்குறுதியில் மக்களுக்கு ஏற்பட்டுள்ள அவநம்பிக்கையுமே, பஞ்சாயத்துத் தேர்தலில் கம்யூனிஸ்டுகள் பெற்றப் பெருந் தோல்விக்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.

ஐதராபாத் பிரதேச காங்கிரஸ் தலைவர் அந்த 'செம் மாவட்டத்தில் சுற்றுப் பிரயாணம் செய்த பொழுது, அங்குள்ள மக்கள் அவரை அதிக உற்சாகத்துடன் வரவேற்றனராம். அம்மாவட்டத்தில் எந்த ஒரு காங்கிரஸ் தலைவருக்கும் இதற்குமுன், இப்பொழுது நடைபெற்றது போன்று வரவேற்பும் பாராட்டும் நடைபெற்றது இடையவே கிடையாதாம்.

போர்ச்சுகலின் மனித தன்மையற்ற போக்கு!

பண்டித நேருவின் கடுமையான எச்சரிக்கை

புதுடில்லி, மே 4—

கோவாவில் நிலைமை மோசமாக இருக்கிறது என்றும், போர்ச்சுகீசிய அதிகாரிகள் அறப் போர் வீரர்களை நாடு கடத்த முற்பட்டால் நிலைமை இன்னும் மோசமடையும் என்றும் மக்கள் சபையில் பண்டித நேரு குறிப்பிட்டார்.

இந்தியர்கள் உள்பட 3 கோவா மக்களை ஒரு ஆண்டு முதல் 28-ஆண்டுகள் வரை தண்டித்து நாடு கடத்தியது பற்றி கொண்டு வரப்பட்ட ஒத்திவைப்புத் தீர்மானத் தின்மீது பேசுகையில் பண்டித நேரு மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்தத் தீர்மானம் பண்டிதநேரு பாண்டுங்கிலிருந்து டில்லி வரும் வரையில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

போர்ச்சுக்கல் சர்க்கார், கோவா மக்கள்மீது நம்பிக்கை இழந்து விட்டனர் என்றும், இப்போது போலீசார் மீதும் நம்பிக்கை இல்லாமல் இராணுவத்தின் மீதுதான் நம்பிக்கை வைத்திருக்கின்றனர் என்றும் பண்டிதர் குறிப்பிட்டார்

"சென்ற ஆகஸ்டில் கைது செய்யப்பட்ட அறப்போர் வீரர்களை போர்ச்சுகீசிய கிழக்காப்பிரிக் காவிற்கு அனுப்புகின்றனர் என்று வதந்திகள் உலவின; ஆனால் அவற்றை உறுதிப்படுத்தும் விபரங்கள் கிடைக்கவில்லை," என்று நேரு மேலும் கூறினர்.

"போர்ச்சுகீசிய சர்க்கார் கையாளும் காட்டுமிராண்டித் தனமான, மனிதத் தன்மையற்ற கொள்கையினால் இந்திய சர்க்காரின் போக்கில் மாற்றம் ஏதும் இருக்குமா?" என்று கேட்கப்பட்ட போது, "அது பற்றி ஏதும் குறிப்பு காட்ட இயலாது," என்று நேரு கூறினர்.

வேறு என்ன செய்வார்கள்?

ஆண்டுதோறும் சென்னை நகர சபைக்குக் கொடுத்துவரும் மானியத் தொகையை ரூ. 5 லட்சத்தி லிருந்து ரூ. 20 லட்சத்திற்கு உயர்த்தவேண்டுமென்ற சென்னை நகர சபையின் கோரிக்கையை மாநில சர்க்கார் நிராகரித்துவிட்டதாகத் தெரிகிறது.

காஞ்சி நகர தி. மு. க. அவசரக் கூட்டம்

1—5—55 மாலை 6 மணியளவில் 'திராவிட நாடு' நிலையத்தில், தோழர் டி. சபாபதி தலைமையில் நடைபெற்ற கழக அவசரக் கூட்டத்தில், 8—5—55ல் மே தின விழா நடத்துவதென்றும், அன்று காலை 7 மணிக்கு தோழர் காஞ்சி-கல்யாணசுந்தரம் தலைமையில் சைக்கிள் ஊர்வலமும், நகரின் முக்கிய இடங்களில் கொடியேற்று விழாவும் நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டு, மேற்படி ஊர்வலம், கொடியேற்று விழா ஆகியவற்றிற்கான ஏற்பாடுகளை கவனிக்க தோழர்கள் இ எத்திராசு வி. என். மார்க்கு, கே டி. எஸ் மணி, இரா. வெங்கிடேசன், எஸ் சடையாண்டி, ப சம்பந்தம் ஆகியோர் கொண்ட குழு ஒன்று நியமித்தும், ஊர்வலத்தை முன்னின்று நடத்திச் செல்ல தோழர்கள் வி. என். மார்க்கு, இரா வெங்கிடேசன் ஆகியோரை நியமித்தும், புதிய பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் மாவட்டச் செயலாளர் கே. டி எஸ். மணி ஆகியோருக்கு வரவேற்பும், முன்னாள் பொதுச் செயலாளர் அண்ணாதுரை, முன்னாள் மாவட்டச் செயலாளர் சி. வி எம் அண்ணாமலை, இரா வெங்கிடேசன் ஆகியோருக்குப் பாராட்டும் மாவட்டச் செயலாளர் தலைமையில் அளிப்பதென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

நெல்லை மாவட்ட தி. மு. கழக உறுப்பினர்கட்கு

"நெல்லை மாவட்ட தி. மு. கழக நிர்வாகக் குழுக் கூட்டம், 15—5—55 காலை 10½ மணிக்கு, தூத்துக்குடி செல்விசியர் தெரு, திரு. சி. எம். பாடசாலையில் நடைபெறும். மாநில மாநாட்டு நிதி, மாவட்ட எதிர்கால வேலைத் திட்டம், அண்ணா சுற்றுப்பயணம், பொதுச்செயலாளர் வரவேற்பு, செயலாளரால் கொண்டுவரப் படும் இதர பிரச்சினைகள் ஆகிய பொருட்கள் குறித்து ஆராயப்படும்," என்று நெல்லை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் கே.வி. கே. சாமி அறிவிக்கிறார்.

சேலம் மாவட்ட தி. மு. கழகப் பிரதிநிதிகட்கு

"8—5—55 மாலை 2 மணிக்கு சேலம் 'ரெஸ்ட் ஹவுசில்' மாவட்ட தி. மு. கழகக் கூட்டம் நடைபெறும். மாநில மாநாட்டிற்கு நிதி சேர்த்தல் முக்கிய பொருளாகும். எல்லா மாவட்ட பிரதிநிதிகளும் கூட்டத்தில் அவசியம் கலந்து கொள்ள வேண்டுகிறேன்.

குறிப்பு:— நாளது வரை தேர்தல் விபரங்களை மாவட்டத்திற்கு அனுப்பி வைக்காத கிளைகளின் பிரதிநிதிகள், தேர்தல் விபரங்களுடன் வர வேண்டுகிறேன்," என்று சேலம் மாவட்ட துணைச் செயலாளர் ப. இராமலிங்கம் அறிவிக்கிறார்.

தூத்துக்குடி தோழர்களுக்கு

"8—5—55 ஞாயிறு மாலை 5 மணிக்கு, வடக்கூர் தி. மு. கழக பார் கிளைப்பில் உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும். உறுப்பினர்கள் தவருது வந்து அண்ணா வருகை, பொதுச் செயலாளருக்கு வரவேற்பு, கணக்கு பரிசீலித்தல் ஆகிய பிரச்சினைகளை முடிவு செய்யும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்," என்று, தோழர் எம். எஸ். சிவசாமி அவர்கள் அறிவிக்கிருர்.

திண்டுக்கல் நகர தி.மு. கழக செயற்குழு உறுப்பினர்கட்கு

"7—5—55 இரவு 10-மணிக்கு கழகக் கட்டிடத்தில் செயற் குழுக் கூட்டம் நடைபெறும். 1—5—55 மே தின விழாப் பொதுக்கூட்டத்தின் வரவு-செலவுக் கணக்குகளைச் சரி பார்க்கவும், அடுத்து செய்ய வேண்டிய பணிகள் குறித்தும் ஆராயப்படும்," என்று செயலாளர் அ. சுப்பையா அறிவிக்கிருர்.

பெங்களூர் —இலக்குமணபுரி தி. மு. கழகத் தோழர்கட்கு

"8—5—55-ல் பெங்களூர் மாவட்ட தி. மு. கழகச் சார்பில் நடைபெறவிருக்கும் மே தின விழா ஊர்வலத்தில் கலந்து கொள்ள வேண்டியிருப்பதால் தோழர்கள் அனைவரும் அன்று காலை 8-மணிக்குள் கழக இல்லத்தில் வந்து சேரும்படி கேட்டுக் கொள்கிறேன்," என்று மேற்படி கிளைக்கழகச் செயலாளர் தோழர் ஜி. எஸ். அண்ணியப்பன் தெரிவிக்கிருர்.

கோலைக்கோம்பை தி. மு. கழக ஆண்டு விழா

7—5—55 மாலை 6 மணியளவில், தோழர் ரு. இராமக்குட்டி தலைமையில் மேற்படி விழா நடைபெறும். தோழர்கள் க. அன்பழகன், சிற்றுளி-சுப்பிரமணியம், சி. இல. சுந்தரேசுவரன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர். சிறுருக்கு இனிப்பும் வழங்கப்பெறும்.

புதுவையில் மே தின விழா ஊர்வலம்

8—5—55 ஞாயிறு மாலை 4-30 மணிக்கு புதுவை மங்கள கான சபாவிலிருந்து தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் தலைமையில் மே தின விழா ஊர்வலம் புறப்பட்டு, மாலை 6-மணிக்கு ஒதியஞ்சாலைத் திடலில் நடைபெறும் பொதுக் கூட்டத்துடன் முடிவடையும். பொதுக்கூட்டத்தில் தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், என். வி. நடராசன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

மே தின விழாக் கூட்டங்கள்

★

மதுராந்தகம்
7—5—55 மாலை 6 மணிக்கு
தலைவர்: பி. சிவானந்தம்
பேசுபவர்:
முகவை ஆர்.எஸ்.பாண்டியன்

★

ஈரோடு
காரைவாய்க்கால் திடலில்
7—5—55 மாலை 7 மணிக்கு
தலைவர்: கே. வீரகேசரி
பேசுவோர்:
டி. கே. சீனிவாசன்
எஸ். அப்பாவு
ஈ. ஏ. மதார்சா
முத்துக்கண்ணு-தேவராசன்

[குறிப்பு: மாலை 4 மணிக்கு பஸ் ஸ்டாண்டிலிருந்து தோழர் ஆர் தேவராசன் தலைமையில் சைக்கிள் ஊர்வலம் நடைபெறும்.

★

வாணியம்பாடி
வாரச்சந்தை அருகில்
7—5—55 மாலை 6 மணிக்கு
தலைவர்: முல்லைச்சத்தி
பேசுவோர்:
ஈ. வெ. கி. சம்பத்
எம். பி. வடிவேல்
எம். நடேசன்

★

இராசபாளையம்
டாக்டர் அம்பேத்கார் திடலில்
(அம்மன் பொட்டல்)
8—5—55 மாலை
பேசுவோர்:
தில்லை-வில்லாளன்
ப. க. பாண்டியன்
(அன்று மாலை 2 மணிக்கு மே தின விழா ஊர்வலமும் நடைபெறும்)

★

வேலூர் (வ. ஆ. மாவட்டம்)
8—5—55 மாலை 6 மணிக்கு
பேசுவோர்:
சி. பி. சிற்றரசு
ப. உ. சண்முகம்

★

குடந்தை
வெள்ளி விழா பூங்காவில்
8—5—55 ஞாயிறு மாலை
தலைவர்: சு. பத்மநாபன்
பேசுவோர்:
குடந்தை எஸ். ஆர். ராதா
பூங்கோதை
அருண்மொழி

★

நன்னியூர்

7, 8—5—55 ஆகிய இரு நாட்களிலும் இவ்வூரில் மே தின விழாப் பொதுக்கூட்டங்கள் நடைபெறும். முதல் நாள் பொதுக் கூட்டத்தில் தோழர் டி கே. கருப்பண்ணன் தலைமையில் தோழர் டி பி. மூர்த்தியும், மறுநாள் பொதுக் கூட்டத்தில், தோழர் வி. கே ராஜு தலைமையில் தோழர் டி ஆர். முத்துசாமியும் சொற்பொழிவாற்றுவர். இரு நாட்களிலும் இவ்வூர் தி மு. கழகம், பகுத்தறிவு நாடக மன்றம் ஆகியவை சார்பில் 'மறுமணம்', 'பரபிரம்மம்'—நாடகங்கள் நடைபெறும்.

முத்தமிழ் மன்ற முதல் ஆண்டு விழா

6—5—55 மாலை 6 மணிக்கு சென்னை பெத்துநாய்க்கன் பேட்டை காசி விசுவ நாதர் கோயில் முன்னிலையில் தோழர் கா. அப்பாதுரை அவர்கள் தலைமையில் நடைபெறும். பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், தோழர்கள் சி. ஆர். பாலசுந்தரம், ஆ. ருக்மாங்கதன், மு. பெருமாள், எஸ். இ. எம். தம்பி ஆகியோர் பேசுவர்.

பெங்களூரில் மே விழா ஊர்வலம்

"8—5—55 அன்று பெங்களூர் மாவட்ட தி. மு. கழகச் சார்பில் மே விழாப் பொதுக்கூட்டமும் ஊர்வலமும் நடைபெறும். பிளாக் பள்ளி தி. மு. கழகப்பீடபணிமனையிலிருந்து தோழர் இராகவன் தலைமையில் ஊர்வலம் நடைபெறும். ஒவ்வொரு கிளைக் கழகச் செயலாளரும் தத்தம் கழகத் தோழர்களின் எண்ணிக்கையை 6-5-55-ந் தேதிக்குள் தோழர் இராகவனிடம் தெரியப்படுத்தி, ஊர்வல அணி வகுப்புச் சின்னங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும். மே விழாப் பொதுக்கூட்டம் பற்றிப் பின்னர் அறிவிக்கப்படும்," என்று பெங்களூர் மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் வ. டி. பிரான்சிஸ் அறிவிக்கிருர்.

சென்னை மாகாண சித்த வைத்திய மாநாடு

"இத்திங்கள் 7, 8-ந் தேதிகளில் வட ஆற்காடு மாவட்டம் அரக்கோணம் சி. எம். எஸ். உயர்நிலைப் பள்ளியில் சித்த வைத்தியர்கள் மாநாடு நடைபெறும்," என்று மேற்படி மாநாட்டு வரவேற்புக் குழுத் தலைவர் எச். தேவதாஸ் அறிவிக்கிருர்.

தூளை நகர இளைஞர் கழகம்

6—5—55 மாலை 6-30 மணிக்கு திரு. வி. என். விசுவநாதம் அவர்கள் 'விஞ்ஞான மேதை ஐன்ஸ்டீன்' என்ற தலைப்பில், 10, மாணிக்கச்செட்டித் தெருவிலுள்ள கழக மனையில் சொற்பொழிவாற்றுவார்.

தி. மு. கழகச் சொற்பொழிவாளர்கட்கு ஓர் வேண்டுகோள்

"புதுச்சேரி வட்டாரப் பகுதிகளில் நடைபெறும் கூட்டங்களில் சொற்பொழிவாற்ற வரும் கழகத் தோழர்கள், தி. மு. கிளைக் கழகங்களின் அழைப்புகளைத் தவிர, வேறு யவரின் அழைப்புகளை ஏற்றுக் கொள்ள வேண்டாம்; அப்படி ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் நேரிடுமாயின் புதுவை வட்டார தி. மு. கழகத்தைக் கலந்த பிறகே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்," என்று புதுவை தி.மு. கழகச் செயலாளர் தோழர் ச. சிவப்பிரகாசம் கேட்டுக்கொள்கிருர்.

விடுதலையைச் சந்திக்க......

மே திங்கள் மூன்றும் வாரத்தில் இந்திய எல்லைப் பகுதியிலிருந்து கோவா மீது 'அமைதியான படையெடுப்பு' ஏற்படும் என்றும், கோவாவை இறுதியாக விடுதலை செய்யும் பொருட்டு அறப்போர் வீரர்களின் படை ஒன்று கோவா எல்லைக்குள் நுழையுமென்றும் மக்கள் சபை உறுப்பினரும், புரட்சி சோஷலிஸ்டு கட்சியின் தலைவருமான டி. சௌத்ரி என்பவர் அறிவித்துள்ளார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ, அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.